## ஹோட்டல் டெவலபெர்ஸ் (லங்கா) பிஎல்சி - 2017

---

ஹோட்டல் டெவலபெர்ஸ் (லங்கா) பிஎல்சி (''கம்பனி'') இன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிச்சயிக்கின்ற அவ்வாறான உள்ளகக் கட்டுப்பாடும் இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். நான் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைதிறனின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு அல்ல. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்குகியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஹோட்டல் டெவலபர்ஸ் (லங்கா) பிஎல்சி இன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 விடயத்தின் மீதான அழுத்தம்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல. 12.3 விபரிக்கின்ற ரூபா 1,986,019,251 கிரயத்தில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டதும் கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றதுமான சொத்துக்கள் மீது நான் கவனயீர்ப்புச் செய்கின்றேன். கம்பனி பட்டய மதிப்பீட்டாளர் ஒருவரின் உதவியுடன் விபரமான சொத்து மெய்மையாய்வையும் ஒவ்வொரு சொத்துக்குமான தனித்தனி பெறுமதி மதிப்பீட்டையும் மேற்கொண்டு வருவதுடன் இப்பணி அதன் இறுதி இணக்கம் செய்தல் கட்டத்திற்கு வந்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படவில்லை

#### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாட்டு அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவில் வேண்டப்பட்டதன் பிரகாரம், நான் பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றேன்:

அ. அபிப்பிராயத்திற்கான அடிப்படை மற்றும் கணக்காய்விற்கான நோக்கெல்லையும் வரையறைகளும் மேலே குறிப்பிட்டுள்ளவாறாகும்.

ஆ. - கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களையும் விளக்கங்களையும்நான் பெற்றுக்கொண்டேன் என்பதுடன் இது வரையானஎனது பரிசோதனைகளிலிருந்து தென்படுகின்றவாறு, கம்பனியினால் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்பட்டன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாட்டுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்கியிருந்தன என்பதும்,
எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அகற்றப்பட்ட சொத்துக்களின் மீது முன்னெடுக்கப்பட்ட விற்பனையின் பெறுமதி ரூபா 6,619,751 ஆக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது அவற்றின் மீதான கிரயம் மற்றும் திரண்ட பெறுமான தேய்வு என்பன கணக்குப்புத்தகங்களிலிருந்து குறைத்தெழுதப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 150 நாட்களுக்கு மேற்பட்ட இலங்கை கிரிகட்டிடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 3,236,129 தொடர்பிலான ஊறுசேதத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

------------------------

### 3.1 நிதிசார் பெறுபேறு

--------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்குமுன் தேறிய இலாபம் ரூபா 172,976,000 ஆனது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தொடர்புடைய கால வரிக்குமுன் தேறிய இலாபம் ரூபா 172,945,000 உடன் ஒப்பிடும் போது, நிதி பெறுபேறுகளில் ரூபா 31,000 ஆன முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டில் வருமானம் ரூபா 474,682,000 ஆல் அதிகரித்த போதிலும், பெறுமானத்தேய்வு மற்றும் நிருவாக செலவுகளில் ஏற்பட்ட பொருண்மையான அதிகரிப்பே மீளாய்வாண்டில் சிறியதொரு முன்னேற்றம் ஏற்படுவதத்திற்கான பிரதான காரணியாகும்.

கடந்த நான்கு வருடங்களிற்கான மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில், கம்பனியின் பெறுமதி சேர்மானங்கள் 2013 இலிருந்து 2017 வரை ஏற்ற இறக்கங்களாக காணப்பட்டன. 2016 மற்றும் 2017 ஆண்டுகளிற்கான சம்பளம், வரிகள் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன சாட்டுதல் செய்யப்பட்ட பின்னரான, கம்பனியின் பெறுமதி சேர்மானமானது முறையே ரூபா 1,565,701,000 மற்றும் ரூபா 1,112,222,000 ஆக காணப்பட்டது.

### 3.2 நிதி பகுப்பாய்வு மீளாய்வு

--------------------------------

#### 3.2.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

-------------------------------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்களானது பின்வருமாறு காணப்பட்டது.

| | 2017 | 2016 |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை (சதவீதம்) | 81.73 | 82.65 |
| கொள்விலையில் இலாப எல்லை (Profit Markup) (விற்பனைக்கிரயத்தில் மொத்த இலாபம்) (சதவீதம்) | 447.42 | 476.51 |
| தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 5.74 | 6.81 |
| குடிபான கிரய சதவீதம் (சதவீதம்) | 0.32 | 0.16 |
| விற்பனைப் புரள்வில் நிதிக்கிரயம் (தடவைகள்) | 0.003 | 0.001 |
| இருப்புப் புரள்வு (தடவைகள்) | 10.06 | 10.38 |
| உணவு இருப்புப் புரள்வு (தடவைகள்) | 56.27 | 31.38 |
| நடைமுறை விகிதம் | 0.86:1 | 1.18:1 |
| அமில பரிசோதனை விகிதம் | 0.80:1 | 1.12:1 |
| கிடைக்கத்தக்க அறையொன்றிற்கான வருமானம் | 12,014 | 10,966 |
| அறையொன்றிற்கான சராசரி விலை | 21,077 | 28,968 |

2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கொள்விலையில் இலாப எல்லை (Profit Markup), தேறிய இலாப வீதம் மற்றும் மொத்த இலாப எல்லை என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 29.09 சதவீதம், 1.07 சதவீதம் மற்றும் 0.92 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

### 3.2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

கம்பனியின் நடைமுறைச்சொத்து மற்றும் நடைமுறைப்பொறுப்பு என்பவற்றை பகுப்பாய்வு செய்யும் போது, 2013 தொடக்கம் 2016 வரை நிலவிய நேர்க்கணியத் தொழிற்படு மூலதனமானது 2017 இல் ரூபா 119,898,000 ஆன எதிர்க்கணியப் பெறுமதிக்கு திரும்பியுள்ளது. இது கம்பனியின் தொழிற்படு மூலதன முகாமைத்துவமானது மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளமையை வெளிப்படுகின்றது. காணப்படுகின்றது. அவ்வாறே 2013 இல் ரூபா 4,678,851 ஆக வெளிப்படுத்தப்பட்ட எதிர்க்கணிய திரவத்தன்மையை எல்லையானது மீளாய்வாண்டில் ரூபா 6,433,127 ஆக அதிகரித்திருந்தது.

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாள்கையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 28 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் 2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2018 ஜுன் 01 ஆம் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2003 ஜுன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், மூன்று வருடங்களை விட குறைவில்வாத ஒரு காலப்பகுதிக்கான ஒரு கூட்டிணைந்த திட்டம் கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கம்பனியின் சொத்து முகாமைத்துவம் மற்றும் கடன்பட்டோர் மீதான கட்டுப்பாடு தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.